[2005 மார்ச் 29

வினா எண் 227, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

227—

பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

***41932—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தேசிய பால் வள வாரியத்தில் பெற்றுள்ள கடன் எவ்வளவு?

(ஆ) அது இலாபத்தில் இயங்குகிறதா?

(இ) நட்டத்தில் இயங்கினால், அதனை ஈடுகட்ட எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், தேசிய பால் வள வாரியத்திடமிருந்து பெற்றுள்ள கடன் தொகை ரூ. 110,70,000/–. (ஆ) மற்றும் (இ) இந்த ஒன்றியம் இலாபத்தில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 228, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

228—

சுற்றுலா மையம்

***36035—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2005 மார்ச் 29]

விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி அணையைச் சுற்றுலா மையமாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி அணையைச் சுற்றுலா மையமாக அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை. திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி அணையைச் சுற்றுலா மையமாக அரசு அறிவிக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், தங்கத் தாரகை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் தலங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு, கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருள்கள் பாதுகாப்பு அறை, மின் விளக்குகள் வசதி, தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் கோல்வார்பட்டி அணை உள்ளது. சாத்தூரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலும், விருதுநகர் தேசிய நெடுஞ்சாலையில் சிவகாசியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவிலும் இந்த அணை அமைந்துள்ளது. இந்த அணை, விருதுநகர் மாவட்டத்தில், அர்ஜுனா ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ளது. இந்த ஆற்றில், மழைக் காலத்தில் மட்டுமே போதுமான அளவு நீர் இருக்கும். இந்த அணைப் பகுதிக்கு ஆண்டுதோறும் சுமார் ஐயாயிரம் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். கடந்த 2001–2002 ஆம் ஆண்டில், 15 மாவட்டங்களிலுள்ள சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளைச் செய்ய ரூபாய் 5 கோடி தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், பிளவக்கல் அணையின் மேம்பாட்டுப் பணிகள் செய்வதற்கு ரூ. 20 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம், பூங்கா மேம்பாடு, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிந்துள்ளன. பிளவக்கல்

அணை மற்றும் குள்ளூர் சந்தை அணை ஆகியவை மாவட்ட உலாத் தலங்களாகத் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 229, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

229—

சுற்றுலா மையம்

***51635—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கயத்தாறு அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயிலையும், வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையினையும் இணைத்து சுற்றுலா மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கயத்தாறு அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயிலையும், வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையினையும் இணைத்து சுற்றுலா மையம் அமைப்பது தொடர்பான எந்தவிதச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில உலகமே வியந்து போற்றும் உன்னதத் தலைவியே! சுனாமி என்னும் கொடிய அரக்கனை விரட்டியடித்து வெற்றிகொண்ட நம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, வீரத்தின் விளைநிலமாய், வெள்ளையர்களின் சிம்ம சொப்பனமாய், சுதந்திர வேட்கையைத் தமிழர்களுக்கு மட்டுமன்றி, இந்தியர்கள் அனைவருக்கும் உருவாக்கிய வீரத் தமிழன் வழிபட்ட அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயிலும், வீரபாண்டிய கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட இடத்தில் அமையப்பெற்ற திருவுருவச் சிலையும், இரண்டும் அருகருகிலே அமைந்திருக்கின்றன. இந்த இரண்டும் அருகருகில் அமைந்திருப்பதே ஒரு சாலச் சிறந்த சிறப்பாகும். இது எண்ணற்ற பக்தர்களும், ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளும் ஒன்று சேர்ந்து வரக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும். ஆகவே, ஆலயத்திற்கு வழிபட வரும் பக்தர்களையும், சுற்றுலாப் பயணிகளையும் ஒன்றிணைத்து,